## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

**செய்தி வெளியீட்டு எண்: 106/2024** **நாள்: 03.09.2024**

**செய்திக்குறிப்பு**

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-I 2024 (தொகுதி-I Group-I Services) இல் அடங்கிய பதவிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் முதன்மை எழுத்துத் தேர்வுக்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள தேர்வர்கள் 06.09.2024 முதல் 16.09.2024 வரை தங்களது மூலச் சான்றிதழ்களை (Original Certificates) ஸ்கேன் (Scan) செய்து தேர்வாணைய இணையதளத்தில் OTR மூலமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

மேலும் முதனிலை எழுத்துத் தேர்விற்கு தேர்வு கட்டண விலக்கு கோராத அனைவரும் முதன்மைத் தேர்வுக்கான தேர்வுக் கட்டணம் ரூ. 200/- (ரூபாய் இருநூறு மட்டும்) செலுத்த வேண்டும். அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய கால அவகாசம் சான்றிதழ் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே முடிவடைவதால் தேர்வர்கள் 15.09.2024 ஆம் தேதிக்குள் தேர்வு கட்டணத்தை செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டியவர்கள் கட்டணம் செலுத்திய பின்னரே அவர்கள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தேர்வர்கள், சான்றிதழ்களை மேற்குறிப்பிட்ட நாளுக்குள் பதிவேற்றம் செய்யவில்லை எனில் அத்தேர்வர்(களுக்கு) முதன்மை எழுத்துத் தேர்வில் (Main Written Examination) கலந்து கொள்ள விருப்பமில்லை எனக் கருதி அவரது / அவர்களது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

A. ஜான் லூயிஸ், இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்